**செய்தி வெளியீடு எண்: 318** **நாள்: 07.04.2010**

## சென்னை பைராகிமடம் வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில் இராஜகோபுர குடமுழுக்கு விழா அறநிலையத்துறை அமைச்சர் திரு கே.ஆர்.பெரியகருப்பன் கலந்து கொள்கிறார்

சென்னை என்.எஸ்.ஸி.போஸ் சாலையில் உள்ள பைராகிமடம் அருள்மிகு வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில் இராஜகோபுர குடமுழுக்கு ஏப்ரல் 9–ம் தேதி காலை 09.00 மணிக்கு நடைபெறுகிறது.

இந்தியாவின் லாகூரிலிருந்து 260 ஆண்டுகளுக்கு முன் பைராகி லால்தாஸ் சென்னைக்கு வந்தபோது கோயில் உள்ள பூந்தோட்டத்தில் பூஜைகளை முடித்து படுத்துறங்கியபோது கனவில் திருமலையில் உள்ள திருவேங்கடமுடையான் தோன்றி தனக்கு கோயில் ஒன்று கட்ட குறிப்பிட்டார். அதேசமயம் பூந்தோட்டத்திற்கு சொந்தக்காரர் கனவிலும் தோன்றி பூந்தோட்டத்தில் சிலைகள் பூமிக்கு அடியில் உள்ளதாக தெரிவித்தார். உடன் அனைவரும் பூந்தோட்டத்தில் தோண்டியபோது மூலவர் ஸ்ரீதேவி பூதேவியுடன் வெங்கடேசப் பெருமாள் இருந்ததை கண்டு அதே இடத்தில் கோயிலை கட்டினார். பல ஆண்டுகளில் தற்போதைய கோயில் விரிவுபடுத்தி கட்டப்பட்டது. திருமலை திருப்பதிக்கு வேண்டுவோர் இக்கோயிலிலேயே பிரார்த்தனைகளை செய்யலாம் என்பதும் பிரார்த்தனைகள் ஈடேறும் என்பதும் கோயில் வரலாறு ஆகும்.

பெருமைவாய்ந்த கோயிலில் அரசு அறிவிப்பின்படி என்.எஸ்.ஸி.போஸ் சாலையில் மூன்று நிலை இராஜகோபுரம் ரூபாய் 10 லட்சம் மதிப்பில் ஸ்ரீ பாலாஜி பக்தர்கள் சபை மூலம் புதிதாக கட்டப்பட்டு யாகசாலை பூஜை ஏப்ரல் 8–ம் தேதி மாலை 05.00 மணிக்கு பகவத் பிராத்தனையுடன் வேதபிரபந்தம் தொடங்குகிறது. வாஸ்து சாந்தி, அங்குராப்பணம், மண் எடுத்தல், அக்னி பிரதிஷ்டை, கும்ப ஆவாகனத்துடன் யாகசாலை பூஜைகள் துவங்கி முதல்காலபூஜை முடிவடைகிறது. இரண்டாம்கால யாகசாலை பூஜை ஏப்ரல் 9–ம் தேதி காலை 08.00 மணிக்கு துவங்கி 08.45 மணிக்கு பூர்ணாஹூதியுடன் முடிந்து கலச புறப்பாடு நடைபெறுகிறது. 09.00 மணி அளவில் மூன்று நிலை இராஜகோபுரத்திற்கு திருக்குடமுழுக்கு நடைபெறுகிறது. மூலவர் வெங்கடேசப் பெருமாளுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்று அருள்பிரசாதம் மற்றும் நைவேத்திய பிரசாதம் பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது. காலை 11.00 மணி உற்சவர் விசேஷ அலங்காரத்தில் புறப்பாடு செய்யப்படுகிறது. இரவு 108 திருவிளக்கு பூஜை நடைபெறுகிறது.

அரசு அறிவிப்பின்படி நடைபெறும் இப்பெருவிழாவில் அறநிலையத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சென்னை மாநகர மேயர் மா.சுப்பிரமணியன், அரசு செயலாளர் க.முத்துசாமி, அறநிலையத்துறை ஆணையர் ப.ரா.சம்பத் , புரசை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.எஸ்.பாபு, பூங்காநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கு.சீனிவாசன், அறநிலையத்துறை கூடுதல் ஆணையர்கள் தி.ஜெயராமன், இரா.சுப்பிரமணியன், இணை ஆணையர்கள் ந.திருமகள், எஸ்.ஹரிப்பிரியா, ப்பி.வாசுநாதன், உதவி ஆணையர் த.காவேரி, மாநகராட்சி 3வது மண்டல தலைவர் மா.கன்னியப்பன், 48வது வட்ட மாமன்ற உறுப்பினர் எம்.சரவணன் கலந்து கொள்கின்றனர்.

விழா ஏற்பாடுகளை பரம்பரை அறங்காவலர் மகந்த் துவாரகதாஸ், ஸ்ரீ பாலாஜி பக்தர்கள் சபை, கோயில் நிர்வாக அதிகாரி த.மோகனசுந்தரம் செய்துள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை,**
**தலைமைச் செயலகம்,**
**சென்னை–9.**